2020 மார்ச் 19]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் கண்டிப்பாக அந்தக் கல்லூரியும் அதிலே இடம் பெற்றிருக்கும். சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் அல்லது அங்கே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கௌரவப் பேராசிரியர்களாக அங்கே பணிபுரிபவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்தார். அனைவரையும் பணி நிரந்தரம் செய்வதற்குண்டான வாய்ப்பு குறித்து சொன்னார்; அனைவரையும் அல்ல. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக, 2,331 பணியிடங்களை மட்டும் பூர்த்தி செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதிலே விண்ணப்பித்தவர்களில், தகுதி வாய்ந்தவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். கௌரவ விரிவுரையாளர்களாக நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருபவர்களுக்கு வாய்ப்பை உருவாக்கும் வகையில் இது அமைந்துள்ளது. இதை முழுமையாக நிறைவு செய்தபிறகு, அடுத்த கல்வியாண்டில், கௌரவ விரிவுரையாளர்களாகப் பணிபுரிகின்றவர்களுக்கு வழங்கப்படும் ஊதியமான 15,000 ரூபாயை உயர்த்தி வழங்குவதற்கான ஆய்வை அரசு மேற்கொள்ளும், பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

131—

கால்நடை கிளை நிலையம்

***13501—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி ஊராட்சி, செங்கல்பட்டி மற்றும் வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வேடப்பட்டி மற்றும் செங்கல்பட்டி கிராமங்களில் 1,065 கால்நடை அலகுகள் உள்ளன. இக்கிராமங்களுக்கு அருகிலுள்ள புதூர் புங்கனை, கோணப்பட்டி, அமியம்பட்டி, முருகந்தாழ், ஓட்டப்பட்டி, மண்ணாடிப்பட்டி, பொன்னநகர்பட்டி, ஊமைகவுண்டம்பட்டி, காட்டுசிங்கரிப்பட்டி, சிட்லட்சி ஆகிய கிராமங்களைச் சேர்த்து, மொத்தம் 5,057 கால்நடை அலகுகள் உள்ளன. ஆகவே, இதுகுறித்து அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி நா. மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

எங்களுடைய மாவட்டத்திற்கு அனைத்துக் கல்லூரிகளையும் வழங்கியதோடு, மருத்துவக் கல்லூரியையும் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மாவட்டம் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி ஊராட்சி, செங்கல்பட்டி மற்றும் வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர்

2020 மார்ச் 19]

அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

அவசர சிகிச்சை மையம்

***52632—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டையில் உள்ள அரசு மருத்துவமனையானது 90 படுக்கை வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாகும். நாளொன்றுக்கு 800 புறநோயாளிகளும், 30 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், ஒரு மாதத்திற்கு 3 பிரசவங்கள் நடைபெறக்கூடிய மருத்துவமனையாகும். 24x7 என இரவு நேரத்திலும், அவசர சிகிச்சையில் மருத்துவர்கள் பணியில் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொண்டு என்ன தேவைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்கிறாரோ அதையும் செய்து கொடுப்பதற்கு அரசு தயாராக உள்ளது. செங்கோட்டை அரசு மருத்துவமனையில் Isolation Ward உட்பட 6 படுக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்வி வந்ததற்குப் பின்னால் STEMI என்று சொல்லக்கூடிய இருதய சிறப்புச் சிகிச்சைக்காக, தற்போது ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு மருத்துவர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.